னிடமிருந்தோ அல்லது வேறெவரிடமிருந்தோ, பணத்தைப் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படுவதில் என்னை ஈடுபடுத்துகிற திரு. ஆர். என். மாணிக்கத்தின் உறுதிமொழிப் பத்திரமானது, அவதூறானதும், முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்பானதும் ஆகும்.

இந்த உண்மைக்குப் புறம்பான, அவதூறான குற்றச் சாட்டுகளைச் சுமத்தும் நபர்கள் மீது சம்பந்தப்பட்ட மன்றத்தில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) விதி 106 ன் கீழ் ஆதித் திராவிட நலத்துறை அமைச்சரின் அறிக்கை.

*மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெற்ற ஐ.ஜி. திரு. ஆர். என். மாணிக்கம் என்பவர் ஜஸ்டிஸ் திரு. இராமமூர்த்தி கமிஷனில் தாக்கல் செய்த உறுதிமொழிப் பத்திரத்தைக் குறித்து சமீபத்தில் சில நாளேடுகளில் வெளிவந்த செய்திகள் பற்றி, சில உறுப்பினர்கள் இந்த அவையில் குறிப்பிட்டார்கள். அதுபற்றி இந்த அவைக்கு விளக்கம் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

திரு. ஆர். என். மாணிக்கம் அவர்களின் உறுதிமொழிப் பத்திரத்தில் அவர், மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களையும், என்னையும் ஈடுபடுத்தி, ஆதாரமற்ற சில குற்றச் சாட்டுகளைக் கூறியிருக்கிறார். செய்தித் தாள்களில் வந்துள்ள அறிக்கைகளின்படி, திரு. எம். ஜி. சக்ரபாணியும் அவரதுஇரண்டு மகன்களான திருவாளர்கள் சுகுமாரனும், பாலனும், சாராயக் கலவை ஆலைக்கான உரிமம், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மதுவகைகள் மொத்த விற்பனை உரிமம், சென்னை மாநகரிலும் மற்ற சில இடங்களிலும் சாராய மொத்த விற்பனை விநியோக உரிமம் ஆகியவைகளைப் பெற்றுத் தருவதாக வாக்களித்து ரூ. 10,75,000 பெற்றுக்கொண்டதாகவும், இந்தத் தொகைகள் என்னிடத்திலும், மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்களிடமும் கொடுக்கப்பட்டதாகவும், நாங்கள் அதைப் பெற்றுக் கொண்டதாகவும், அத்தொகை முதலமைச்சருக்குக் கொடுக்கப்படும் என்றும், அவர் தேவையான உரிமத்தை வழங்க ஆணையிடுவார் என்றும், நாங்கள் திரு. பாலனிடம் கூறியதாகவும், திரு. ஆர்.என். மாணிக்கம் குற்றஞ்சாட்டியுள்ளார். தானும் தனது மகன்களும் பெற்றுக்கொண்ட பணம், முதலமைச்சருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று திரு. எம். ஜி. சக்ரபாணி, திரு. ஆர். என். மாணிக்கத்திடம் கூறியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

1982 ஏப்ரல் 1] [திரு. எம். விஜயசாரதி]

இந்த உறுதிமொழிப் பத்திரத்திற்குப் பொருத்தமான பதில் முறையாக சம்பந்தப்பட்ட மன்றத்திற்குத் தரப்படும் என்றாலும், இம்மாமன்ற உறுப்பினர்கள் சிலர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, உண்மை நிலையை அவைக்கு விளக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீதும், என்மீதும், மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் மீதும் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் முழுக்க முழுக்க உண்மைக்குப் புறம்பானவை என்றும், சிறிதும் ஆதாரமற்றவை என்றும், முற்றிலும் தவறானவை என்றும், இந்த அவையின் முன்பு வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

கடந்த 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாளிட்ட ''அண்ணா'' செய்தித்தாள் போன்றவைகளில் வெளியிடப்பட்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அறிக்கையில், புரட்சித் தலைவர் அவர்களின் தமையனார் குடும்பத்தாரோடு யாரும் எந்தவித தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று தெளிவாக்கப்பட்டுள்ளதை நாடு அறியும். நாங்களும் அறிவோம். புரட்சித் தலைவர் அவர்களின் அறிக்கைக்குப் பின்னர் அவரது தமையனார் குடும்பத்தினர் புரட்சித் தலைவருக்கு எதிராக வெளியிட்டுள்ள அறிக்கையைப் பற்றியும் அனைவரும் அறிவோம். இத்தகைய அறிக்கைகள் வெளிவந்த தேதிக்குப் பின்னால் ஏப்ரல், மே மாதங்களில் முன்னாள் ஐ.ஜி. திரு. ஆர். என். மாணிக்கத்திற்குத் தொடர்பான சிலர் திரு. எம். ஜி. சக்ரபாணி அவர்களின் குடும்பத்தாரை அணுகி, அவர்கள் மூலம் என்னை அணுகி, புரட்சித் தலைவரின் உதவியைப் பெற முயன்றார்கள் என்று கூறுவது மிகவும் விசித்திரமாக உள்ளது.

இந்த நிலையில், நானும், மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்களும், புரட்சித் தலைவர் அவர்களுக்குக் கொடுப்பதற்காகப் பணத்தைப் பெற்றுக்கொண்டோம் என்று இப்போது சொல்வதும், இந்தப் பணம் புரட்சித் தலைவர் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டது என்று கூறுவதும் முற்றிலும் உண்மைக்கு மாறானதும் அவதூறானதும், வேண்டுமென்றே எங்களுடைய பெயருக்கு ஊறு விளைவிக்க முயற்சிப்பதும் ஆகும்.

இந்த நிலையில் திரு. எம். ஜி. சக்ரபாணி அவர்களோ அல்லது அவரது மகன்களோ அல்லது வேறு எவரோ என்னிடம் மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்டத்துறை அமைச்ச,

திரு. சி. பொன்னையன் அவர்களிடமும் பணம் கொடுத்தார்கள் என்றும், நாங்கள் இருவரும் அத்தொகைகளைப் பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்துவோம் என்றும், அத்தொகை முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கட்குக் கொடுக்கப்படும் என்றும், அவர் தேவையான உரிமத்தை வழங்குவதற்கு ஆணையிடுவார் என்றும், நாங்கள் கூறியதாகவும் திரு. ஆர். என். மாணிக்கம் அவர்களின் உறுதிமொழிப்பத்திரத்தில் கூறப்பட்டுள்ள கூற்று, முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதும், முழுக்க முழுக்க தவறானதும் ஆகும். எவருமே, எப்போதுமே, சாராயக் கலவை ஆலை சாராய மொத்த விற்பனை, இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள் மொத்த விற்பனை உரிமங்கள் வழங்குவது சம்பந்தமாக என்னைச் சந்தித்ததுமில்லை; மேற்படி உரிமங்கள் வழங்குவதில் எனக்கு எந்த வகையிலும் தொடர்பும் இல்லை. திரு. சக்ரபாணியுடனும், அவரது குடும்பத்தாருடனும், புரட்சித் தலைவர் அவர்கள் தொடர்பை நீக்கிக் கொண்டது பற்றி, 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாளன்று முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையை நானறிவேன். திரு. சக்கரபாணியின் மகன் வெளியிட்ட பதில் அறிக்கையையும் நானறிவேன். அப்படியிருந்தும், உரிமங்கள் வழங்குவது சம்பந்தமாக திரு. எம். ஜி. சக்ரபாணி அவர்களின் மகன் திரு. பாலனையோ அல்லது வேறெவரையுமோ நான் அனுமதித்திருப்பேன் என்பதும், முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறி அவரிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டேன் என்பதும் நம்பத் தகாத கற்பனைக் கூற்றாகும். திரு. பாலனோ அல்லது வேறெவருமோ, எந்த நோக்கத்திற்காகவும், இன்னும் குறிப்பாகச் சொன்னால், சாராயக் கலவை ஆலைக்கான உரிமம், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் மொத்த விற்பனை உரிமம், சென்னை மாநகரிலும் மற்ற சில இடங்களிலும் சாராய மொத்த விற்பனை விநியோக உரிமம் ஆகியவைகள் வழங்கும் நோக்கத்திற்காக, எப்போதுமே என்னைச் சந்தித்ததே இல்லை. மேலும், இதுபற்றி திரு. பாலனிடமோ, திரு. சுந்தரமூர்த்தி, திரு. ரவீந்திரநாத் ஆகியோரிடமோ, ஆலைக்கான இயந்திரங்களை வாங்க ஏற்பாடு செய்யலாமென்று நான் கூறியிருந்ததாகச் சொல்வது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதும், அவதூறானதும் ஆகும். சாராய, மது மொத்த விற்பனை சம்பந்தப்பட்ட உரிமங்கள் வழங்குவது சம்பந்தமாக திரு. பாலனிடமோ அல்லது வேறெவரிடமிருந்தோ, பணத்தைப் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படுவதில் என்னை ஈடுபடுத்துகின்ற திரு. ஆர். என். மாணிக்கத்தின் உறுதிமொழிப் பத்திரமானதும், அவதூறானதும், முழுக்க, முழுக்க உண்மைக்குப் புறம்பானதும் ஆகும். இந்த உண்மைக்குப் புறம்பான, அவதூறான குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் நபர்கள் மீது சம்பந்தப்பட்ட மன்றத்தில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.